# காரைநலன்புரிச்சங்கம்
## Karai Welfare Society(UK)
Charity No 1126413

Issue 2 | News Letter 2 | June 2012


# சுகாதார மேம்படுத்தல்



### கண்படர் அகற்றல் சிகிச்சை

செல்வி.வர்ஷினி தியாகலிங்கத்தின் தேம்ஸ் நதியிலான ஒரு மைல் தூரதொண்டு நீச்சலின் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தின் ஒரு பகுதியில் இருந்து எமதூரில் உள்ள முதியோர்களுக்கு இலவசகண்படர் அகற்றல் சிகிச்சைமேற்கொள்ளப் பட்டுவருகின்றது. இரண்டு கட்டமாக மூளாய் வைத்தியசாலையில் டாக்டர் எஸ்.குகதாசன் அவர்களால் ,காரைநகரைச் சேர்ந்த சுமார் முப்பத்திரண்டுக்கும் மேற்பட்ட கண்பார்வை குறைந்தத நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை நிறைவுற்றது.

நாற்பத்தைந்திற்கும் மேற்பட்ட பார்வைக் குறைபாடுள்ள மக்கள், காரை அபிவிருத்தி சபைகாரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ,கிராமசேவகர்களினால் குறைந்ததளவு மாதாந்த வருமானம் உள்ளோர் என்று சான்றிதழ் வழங்கப்பட்டவர்களே இச்சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் .

இவர்கள் அனைவரும் செல்வி வர்ஷினி தியாகலிங்கத்தை மனதாரா வாழ்த்திநன்றியையும் தெரிவித்தனர், அத்துடன் பிருத்தானியகாரை நலன் புரிச்சங்கத்தினருக்கும் தங்கள் நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர்.

இனிவரும் காலங்களில் செல்வி வர்ஷினியை போல் இங்குள்ள எமது இளம் சமூதாயமும் இவ்வாறான வேறுபல தொண்டு நிகழ்வில் ஈடுபடுவதன்மூலம்தம்மையும் ,தாம்சார்ந்தஊரையும் முன்னேற்றிக் கொள்ளலாம் என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

## வைத்தியசாலை சமையலறை சீர்திருத்த வேலைகள்...

பிருத்தானிய காரை நலன்புரிச்சங்கம், வலந்தலை வைத்தியசாலையில் நீண்டகாலமாகபராமரிப்புக்கு உட்படுத்தப்படாமல் இருந்தசமையல் அறையை சுகாதார நோக்கம் கருதி பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க உதவி நிவாரனங்களால் ஈடு கொடுத்து நிவர்த்தி செய்ய முடியாத சில வேலைத்திட்டங்களில் இதுவும் ஒன்று. இதனை நாம்நேரடியாக பார்வையிட்டபோது அதனது திருத்த வேலைகளின் அவசியம் எங்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது. இவ்திருத்த வேலைகள் யாவன; சமையல் அறைநிலம் கொத்தி புதிதாக அமைத்தது, புகைக்கூடு உட்பட சுவர்கள் சுரண்டி பூச்சு பூசியது, யன்னல் திருத்தி நெற் அடித்து கொடுத்தது.

இவற்றிக்கான செலவு அண்ணளவாக £400 வழங்கப்பட்டது. இவ்வேலைகள் அனைத்தும்எங்கள் நிர்வாகசபை உறுப்பினர்களின் மேற்பார்வையில்பூர்த்தி செய்யப்பட்டது.

## அவசர சிகிச்சை கட்டடம்



காரைநகர் வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு இல்லை என்ற குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு கடந்த ஏப்ரல் மாதம் காரை நலன்புரிச்சங்க முன்னாள் தலைவர் திரு.வி.நாகேந்திரம் தமது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக அவசர சிகிச்சைப்பிரிவு கட்டிடத்தை அமைத்து அன்பளிப்பாக செய்யப்பட்டுள்ளது.

# கல்வி மேம்படுத்தல்

பிருத்தானிய காரை நலன் புரிச்சங்கத்தின் பிரதான நோக்கங்களில் முக்கியமானதானகல்வி மேம்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ், அனைத்து கல்லூரிகள், பாடசாலைகள் யாவும் பாகுபாடுகள், பாரபட்சம் அன்றி அவர்களுக்கு உதவி ஊக்குவிக்கவேண்டும் என்பது எமது கருத்து.

## *Dr தியாகராஜா ம.ம. வித்தியாலய சீர்திருத்த வேலைகள்.*



Dr.ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க எமது பிருத்தானிய காரைநலன் புரிச்சங்கம் , ஓரிரு சீர்திருத்த வேலைகளுக்கு நிதிஉதவி வழங்கியுள்ளது.

கல்லூரியின் மைதானத்திற்கு மண் கொட்டுவதற்க்கு ஒரு பகுதி உதவித் தொகையா £600 வழங்கப்பட்டது. ஏறக்குறைய 1200 கும் மேற்பட்ட டிராக்டர் லோட் மண் கொட்டப்பட்டுள்ளது. இந்தமண் வலந்தலை சந்தியில் உதவிஅரசாங்க அதிபர் பணிமனைக்கு பின் புறமாக தோண்டப்பட்டுவரும் நீர்த்தேக்கதிட்டத்தில் இருந்து இலவசமாக கிடைத்த பொழுதிலும், இவற்றை மைதானத்திற்கு ஏற்றிச் சென்று சேர்க்கும் கூலித்தொகையின் ஒரு பகுதியையே நாம் வழங்கி இருந்தோம் . கடந்த காலங்களில் இந்தமைதானத்தில் இக்கல்லூரியின் விளையாட்டு போட்டிகள்மட்டுமன்றி, வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி பாடசாலைகள் ரீதியாகவும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பல பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளு இடம் பெற்றது என்பதனை நாம்யாரும் மறந்துவிட முடியாது.

மேலும் கல்லூரியின் இணையத்தள நூல் நிலையத்திற்க்கான (Digital library ) and விஞ்ஞரன ஆய்வு கூடம் நிரந்தர மின்சார இணைப்பு வழங்கப்படுவதற்க்கு ரூபாய் £300 நிதிஉதவி வழங்கப்பட்டது.தற்பொழுது மாணவர்கள் பயனுறும் வகையில் இயங்கி வருகின்றது.

இந்த இணையத்தள நூல்நிலையம் and விஞ்ஞரன ஆய்வு கூடம் இலங்கைக்கான உலக வங்கியின் நிதிஉதவி உடனும் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவி உடனும் கட்டப்பட்டுள்ள போதிலும் , இந்நிறுவனங்கள் இவற்றிற்க்கான எதிர்கால பராமரிப்பு செலவுகளை வழங்குவதில்லை என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆகவேதான் இவ்வாறான செலவுகளை எம்போன்ற நலன்புரிச்சங்கங்களும் , மற்றும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் முன்வந்து உதவவேண்டும்.

## *யாழ்ரன் கல்லூரியில் விசேட கணணி மற்றும் ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்*



யாழ்ரன் கல்லூரியில் தரம் ஆறுதொடக்கம் பத்துவரையான வகுப்புகளுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் விசேட கணணிமற்றும் ஆங்கில வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளுக்கு பிருத்தானியகாரை நலன்புரிச்சங்கமும் கனடா காரைகலாச்சார மன்றமும் இணைந்து நிதிஉதவி வழங்கி வருகின்றது. மாதம் ஒன்றிற்கு இதற்கான உதவித்தொகை ஏறக்குறைய ரூபாய் 13,500 ஆகும்.இந்த விசேட வகுப்புகள் மூலம் மாணவர்கள் பெரும் பயனடைகிறார்கள்.

இந்த விசேட வகுப்புகள் பற்றி கல்லூரி அதிபர் திரு. வே .முருகமூர்த்தி கருத்து தெரிவிக்கையில்," சர்வதேசமட்டத்தில்எமது மாணவர்களை இணைத்து கொள்ளும் முகமாக இவ்வேலைத்திட்டம் நடைபெறுகின்றது ,மாணவர்கள் ஆர்வத்துடனும் ,மகிழ்ச்சியுடனும் கற்கிறார்கள். மேலும்மாணவர்கள்மி குந்த உற்சாகத்துடன் இவ்வகுப்புகளில் கலந்துகொள்கிறார்கள் " என்றுகூறியதுடன் இக்கல்வி சார்செயற்பாடுகளுக்கு அனுசரணையாக இருந்து வரும் பிருத்தானியகாரை நலன்புரிச்சங்கத்தினருக்கும் ,கனடாகாரைகலாச்சார மன்றத்தினருக்கும் கல்லூரியினதும், மாணவர்களினதும் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## யா/வியாவில் சைவ வித்தியாலய சீர் திருத்த பணிகள்.



மேற்படி பாடசாலைக்கு அபிவிருத்திசபை வேண்டுகோளுக்கு இணங்க சில சீர் திருத்த வேலைகள் எம்மால் மேற்க்கொள்ளப்பட்டன. இவ் சீர் திருத்த வேலைகளாவன,மலசல கூடத்திருத்த வேலைகள், கணணி அறைக்கான நிரந்தர மின்சார இணைப்பு வழங்கியமை, மற்றும் சமையல் அறைக்கு மேல்சீட் அடித்து கொடுத்தது என்பனவாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இவ் சீர் திருத்த வேலைகளுக்காக எம்மால் £525 வழங்கப்பட்டது.



## சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய உதவித்தொகை

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு எங்கள் கடந்த நிர்வாகத்தினரால்ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்த பாடசாலை முன்னேற்றத்திற்கான உதவித்தொகை £1500, இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திடம்கையளிக்கப்பட்டது.

மேலும் இப்பாடசாலையில் இதுவரை காலமும் தரம் 5 இற்கானபாட வகுப்புக்கள் உயர்கல்வி நடைபெறும் பிரிவில் நடைபெற்று வந்தது.தற்பொழுதுள்ள கல்வித்திட்டத்தின் தேவைகளின்படி ஆரம்ப வகுப்புகளில்ஒவ்வொரு வகுப்புக்குமான செயற்ப்பாட்டறை முக்கியமானதாக உள்ளது.

அத்துடன்அவர்களுக்கு கணணி மற்றும் நூலகம் அமையவேண்டுமெனவும் கல்வித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.இவற்றை நிறைவுசெய்து
ஆண்டு 1 முதல் 5 வரை ஒரே இடத்தில் இயங்குவதனால் ஆரம்ப கல்வி சிறந்த முறையில் போதிக்கப்படும்.



தற்பொழுது நடைபெற்றுவரும் இவ் நிர்மாணவேலைகள் யாவும் பழைய மாணவர் ஒருவராலும் சுந்தரமூர்த்தி நாயனார்- பாலாவோடை பழைய மாணவர் சங்கமும்(லண்டன்), நிதிஉதவி வழங்கி வருகின்றனர்.
இதன் பிரகாரம் சுந்தரமூர்த்தி நாயனார்பாடசாலையில் ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடம் மாணவர்கள் பாதுகாப்புகருதி பாவனைக்கு உகந்ததல்ல என கல்வித் திணைக்களம் கருத்து தெரிவித்தமையினால் , அதனை அகற்றி ஒருவிளையாட்டு மைதானமும் அமைத்தல் போன்ற பணிகள் தற்பொழுது நடைபெற்றுவரும்வேலைத்திட்டங்களில் அடங்குகின்றது.

இதனை பாடசாலை பழைய மாணவர் சங்கமும் , காரை அபிவிருத்தி சபையும் இணைந்துநடைமுறைப்படுத்தி வருகின்றது.



## காரை அபிவிருத்தி சபைமாணவர் நூலகம்

முதலாம் கட்டகட்டிட வேலைகள் அரம்பம

எமது ஊர் சிறார்களுக்கும், மாணவர்களுக்கும் ஓர் reference library ஐ அமைக்கும் முயற்சியின் ஆரம்பக்கட்டமகமுதலாம் கட்டகட்டிடத்திற்கான அத்திபாரவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தினை 12மாதங்களிள ்பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுளது

இதில் முன்பள்ளி சிறார்களிற்கும் ஆரம்பபாடசாலைமாணவர்களிற்கும் நூலகபயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குஉங்கள் அனைவரினதும்ஆதரவும் பங்களிப்பம் வேண்டப்படுகிறது.

## புதிய பேரூந்து நிலையம்மக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

காரைநகர் வலந்தலைச் சந்தியில் லண்டன் காரை நலன்புரிச்சங்கத்தின் நிதியுதவியுடன் முன்னால்செயலாளர் காரை அபிவிருத்தி சபை, அமரர் தில்லையம்பலவாணர் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பஸ் நிலையக் கட்டிடம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது. காரைநகர் அபிவிருத்திச்சபைத் தலைவர்க.சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின்பொறியியலாளர் அவர்கள்பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பஸ் நிலையத்தை திறந்துவைத்தார்.



## குடிநீர்வினியோகம்

பொதுவாக கோடைகாலங்களில் காரைநகரில் குடிதண்ணீர் பெரும்பிரச்சனையாக உள்ளது. பிருத்தானிய வாழ்காரை மக்களாகிய உங்கள் உதவியுடன் எம்மால் வழங்கபட்ட இரு குடி நீர்வினியோகதாங்கிகள் இன்னமும், முக்கியமாககோடைகாலங்களில்இக்குறைபாட்டை முடிந்தளவு நிறைவேற்றி வருகிறது. இருந்தும்சிலசமயங்களில்தவிர்க்கமுடியாத பலகாரணங்களால் இச்சேவைமக்கள் தேவையை சென்றடையமுடியாமல்இருப்பதுஇன்பது தவிர்க்க முடியாததொன்று.




பிருத்தானியகாரை நலன்புரிச் சங்கம் குடிநீர் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் நீண்ட எதிர்கால திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் முதல் கட்டமாக குளம் வெட்டுவதற்காக நிதி உதவிவழங்கியுள்ளது. மேலும் பொது இடங்களில் (உதாரணமா கவைத்தியசாலைகள் ,பாடசாலைகள், ஆலயங்கள்), கூரைகளில் இருந்து வழிந்தோடும் மழை நீரைகிணறுகளிலும்,நீர்த்தாங்கிகளிலும்எவ்வாறுசேமிப்பது,ஊரில்இருக்கும்எல்லாகிராமங்களிலும்உள்ளகை விடப்பட்டுள்ள கேணிகள் , குளங்கள் மற்றும் குடிநீர்கிணறுகளை மீழாளப்படுத்தல் போன்ற செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

## குளம் வெட்டுவதற்கு களபூமியில் காணி கொள்வனவு

காரைநகர் தெற்கு கமக்காரர் சங்கத்தின் வேண்டு கோளுக்கு அமையவும் எமது சங்கத்தின் திட்டங்களின் ஒன்றான நீர் சேமிப்புதிட்டத்தின் ஆரம்ப சேவையாகவும் கள பூமியில் பேரூந்து நிலையத்திற்கு முன்பாக 25 பரப்புகாணி £1350 செலவில் கொள்வனவு செய்துமேற்படி கமக்காரர்சங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்பிரதானநோக்கங்களாகமழைநீரை சேகரித்தல் ,இதனை அண்டியுள்ளவயல் பிரதேசங்களில் சிறு போகத்தை ஊக்குவித்தல், மற்றும் நிலத்தில் நீர் அளவை நீண்டகாலத்திற்கு பேணுதல் என்பனவாகும்.

. இத்திட்டத்தின் மூலம் இதனை அண்டியுள்ள ஒருசதுர கிலோ மீட்டர் சுற்றளவு பிரதேசம் பயனடையும் என்பது ஆய்வு. இந்ததிட்டம்முடிவடைந்து இதில்நீர் சேகரிப்புஆரம்பித்த பின்னர் இதனை அண்டியுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகளின் உவர்ப்புத் தன்மை எதிர்காலங்களில் குறை ந்து நன்னீரா கமாற வாய்ப்புண்டு என்பது ஆய்வாளர்கள்கருத்து. இத்திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

## காரைநகர் பிரதேசசெயலர்,தே. பாபுவின் வாழ்த்துச்செய்தி



லண்டன் காரைநகர்நலன்புரிச்சங்கத்தினால் நடாத்தப்படும் காரைச்சங்கமம் விழாவிற்கு

வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

புலம்பெயர்ந்த பலநூற்றுக்கணக்கான குடும்பத்தினர் லண்டனில் வசித்தாலும் “எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவிய”எமது காரைநகர் அபிவிருத்தியடைய வேண்டும் என்ற உயர்நோக்கில் குடிநீர் வசதிகள் உட்பட பலஅத்திவாசிய தேவைகளை வழங்குவதையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்

அத்துடன் காரைநகர்அபிவிருத்திக்கு எமது நிர்வாகத்தினால் பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தும் வேளை தாங்களும் தோளோடுதோள் நிற்கவேண்டும் என்பதுடன் தங்களின் அபிவிருத்தி முயற்சிக்கும் பூரணஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதை தெரிவிப்பதுடன் இன்றைய விழாசிறப்பாகநடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## முதுசங்களைத்தேடி…நூல்வெளியீட்டுத்திட்டம்



எமது பழமைகளை,பெருமைகளை,பாரம்பரியங்களை எடுத்துக்கூறும் எம்மூத்தோர்களின் வெளியீடுகளான அரும்பெரும் நூல்களை மீழ்பதிப்புசெய்தல்.முதுசம் என்றால் எமதுபாரம்பரியச் சொத்து(Inherited Asset) என்பதுபொருள். இந்த சொத்துக்களை மீழ் ஆவணப்படுத்தல் என்பதுஎங்கள் தலையாய கடமையாகும் என்பதனால் இதன் முதல் கட்டமாகநம் வித்துவான் F.X.Cநடராஜா அவர்களின் பல ஆக்கங்களின் ஒன்றான“காரைமானமியம்”எனும் நூலினைநாம் மீழ்பதிப்பு செய்திருந்தோம்.

இந்தநூலின் இரண்டாம் பதிப்புமுதன் முறையாககாரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் வெளியிடப்பட்டு ஏனைய நாடுகளில் வெளியிடப்பட்டுவருகின்றது. இந்தநூலின் வெளியீட்டு உரிமையை பிரித்தானிய காரைநலன்புரிச் சங்கமும், கனடாகாரைகலாச்சார மன்றமும் ஏற்றுள்ளது.

மேலும் இந்நூல் இலங்கைலண்டன்,பிரான்ஸ்,சுவிஸ் ஆகியநாடுகளில் ஏற்கனவே வெற்றிகரமாக வெளியீடுசெய்யப்பட்டுள்ளது. அடுத்துகனடாவில் நடக்க இருக்கும் “காரைவசந்தம்”விழாவிலும், பின்னர் அவுஸ்த்திரேலியாவிலும் வெளியிடப்படவுள்ளது. இவ் அனைத்து நாடுகளில் இருந்துகிடைக்கப்பெறும் நிதியானது,அடுத்தடுத்து வெளியிடப்படவுள்ள நூல்களுக்கு மூலதனமாக அமையும் என்பது இத்திட்டத்தின் நோக்கம்.

## எமது வருங்காலத் திட்டங்கள் …………..

இங்குள்ள எமது ஊர் பல்கலைக்கழக மாணவ மாணவியர்களை அவர்களின் பெற்றோர்களின் உதவியுடனும் பங்களிப்புடனும் ஒவ்வொரு வருடமும் ஐந்து பேர்கொண்ட குழுக்களாகத் திரட்டி எமது ஊருக்கு அனுப்பி அங்குள்ள கல்லூரிகள்,பாடசாலைகளில் பயிலும் எம் ஊர் உறவுகளுக்கு இவர்களாலான அறிவுரைகளைவழங்கும் திட்டம். இதில் சுகாதார மற்றும் பொது சேவை நிறுவனங்களும் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் இங்கு வாழும் எமது இளம் சமுதாயத்திற்கும் ஊரில் உள்ள எமது இளம் சமுதாயத்திற்கும் உறவுப்பாலத்தை ஏற்படுத்தல்.

| ***President*** | ***Secretary*** | ***Treasurer*** |
|---|---|---|
| Mr.P.Thavarajah -07951950843 | Mr. S.Sivapathasundaram-01908558976 | Mr. Ravindran-02089493226 |
| thavarajah@btopenworld.com | yassivam@talktalk.net | nadarajah.ravindran@gmail.com |